மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. டி.வி.எஸ்.-இலிருந்து 340 பஸ்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதோடு மேலும் 40 பஸ்கள் அளவிற்குக் கூடுதலாக ஆக்கியிருக்கிறோம். மதுரை நகரில் ஓடும் பஸ் முழுவதையும் எடுக்க இப்போது ஒன்றும் உத்தேசமில்லை. ஏனென்றால் விரைவிலே எல்லாப் பேருந்துகளையும் மேற்கொள்ளக் கூடிய திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கொப்ப வரவிருக்கிற காரணத்தினால் மதுரை நகருக்காகத் தனியாக ஒரு திட்டம் அவசியமில்லையென்று கருதுகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இருக்கிற மதுரை மாவட்டத்திலும் பக்கத்தில் இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்திலும் புதிதாக வருகிற வழித்தடங்களை யெல்லாம் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அப்படி ஒன்றும் உத்தேசம் இப்போதில்லை. ஆனால் படிப்படியாக நாட்டுடமையாக்குவது செயல் முறையில் இருக்கிற காரணத்தினால் புதிய வழித்தடங்களைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

லாரிகளுக்குச் சீரான கட்டணம்

* 174. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரிகளில் சாமான்கள் ஏற்றிச் செல்வதற்கான கட்டணங்கள் மாநிலம் முழுவதும் ஒரே சீராக இருக்குமாறு ஒழுங்குபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, லாரிகளில் சாமான்களை ஏற்றிச்செல்வதற்கு கட்டணமாக டன் ஒன்றுக்கு சென்னையிலிருந்து மாயூரத்திற்கு ரூ. 20 முதல் ரூ. 30 வரையிலும், அதைப்போல் கும்பகோணத்திற்கும் லாரிகளுக்குத் தக்கபடியும் இடங்களுக்கு ஏற்றபடியும், நேரத்திற்கு ஏற்றபடியும் வசூலிக்

1972 ஆகஸ்ட் 18]

கிறார்கள். இதை மாற்றியமைத்து ஒரே சீராகக் கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, லாரிகளைப் பொறுத்தவரையில், எந்தெந்த இடங்களுக்குச் செல்கின்றன, என்னென்ன பொருள்களை ஏற்றிச் செல்கின்றன என்பதைப் பொறுத்து பல்வேறு விகிதங்களில் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆகவே, ஒரே சீரான கட்டணம் வசூலிக்க வேண்டும் என்பது மிகவும் கடினமான காரியம்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, பெரிய பஸ் கம்பெனிகளை எல்லாம் தேசியமயமாக்கி வருகிறோம். இன்னும் ஐந்தாண்டு காலத்திற்குள் எல்லா பஸ்களையும் தேசியமயமாக்கி விடுவோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகையால், இந்த லாரிகளையும்—முதலில் பெரிய லாரி கம்பெனிகளையும் பின்பு படிப்படியாக சிறிய லாரி கம்பெனிகளையும் தேசியமயமாக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பஸ்களையே இன்னும் முழுவதுமாகத் தேசியமயமாக்கவில்லை. முதலில் இந்த வேலை முடிந்த பின்னால் லாரிகளைத் தேசியமயமாக்குவது பற்றி யோசிக்கலாம்.

Murugan temple in Vadakku Tiruchitrambalam

* 175 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a number of idols of the Muruga Temple at Vadakku Tiruchitrambalam village near Madurantakam were damaged in May 1972; and

(*b*) If so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நகரின் வட பகுதியில் உள்ள வட திருச்சிற்றம்பலம், ஸ்ரீ ஆறுமுகர் ஆலயத்திலுள்ள நவக்கிரக சிலைகள் 29-4-1972 தேதி மாலை மதுராந்தகம் குப்புராஜ் என்பவரால் குடிவெறியில் கற்களால் தாக்கப்பட்டுள்ளது. அந்நபர்மீது இ.பி.கோ. 295 மற்றும் 297 பிரிவுகளின்